**தெங்கு அபிவிருத்தி அதிகார சபை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 அபிப்பிராயம்**

---

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குப் பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

---

இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் வருமானச் செலவின விடயங்கள் பொருண்மையாக இருக்கையில் கணக்குகளில் வேறாக அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டிற்கான துன்கன்னாவ செயற்திட்டத்தின் வருமானச் செலவினங்கள் முறையே ரூபா 1,019,133 மற்றும் ரூபா 3,689,851 ஒன்றுடன் ஒன்று எதிரீடு செய்யப்பட்டு ரூபா 2,670,718 ஆக அச் செயற்திட்டத்தின் மொத்த நட்டம் செயன்முறை அபிவிருத்திச் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இசுருசெல இன் இலாபம்/ நட்டத்தினைக் கணிக்கும் போது 2010 ஆம் ஆண்டிற்கான ஊழியர் சம்பளங்கள் ரூபா 258,125 மற்றும் இறுதி இருப்பு ரூபா 455,234 கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்தன.

(ஆ) நாராஹென்பிட்டி கட்டிடத்தின் கழிவுப் பொருட்கள் செல்லும் கால்வாய் பழுதுபார்க்கப்படுவதற்கான ரூபா 7 மில்லியன் பெறுமதியான செயற்திட்டத்திற்காக 2010 நவம்பர் மாதத்தின் போது கொழும்பு நகர சபைக்கு முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 2 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களின் முற்பணமாக கணக்கிற்கு கொண்டுவரப்படாது காணிகளின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி மீதியான ரூபா 5 மில்லியன் தொகை செலவிடப்படாதிருக்கையில் காணிகளின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய கணக்குகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையினால் ஹிரியால விவசாயக் கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 2,000,000 தொகையான கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் வழங்கப்பட்ட நாள் முதல் 6 மாதகாலத்திற்குள் வட்டியின்றி சமமான தவணைகளில் செலுத்தித் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் இரு சந்தர்ப்பங்களின் போது ரூபா 550,000 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 1,450,000 தொகையான கடன் தீர்க்கப்படாமை தொடர்பாக 2010 திசெம்பர் 31 வரையும் அதிகாரசபையினால் முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் உத்தியோகத்தர் ஒருவர் தவறாகப் பயன்படுத்தப்பட்ட பணம் அறவிடப்பட முடியாது 1998 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஆலை உரிமையாளர்களின் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட உள்ள மொத்த பணமும் வட்டித் தொகையும் ரூபா 1,504,373 ஆகக் காணப்பட்டது.

(இ) அரசாங்கத்திற்குச் செந்தமான கம்பனியான வரையறுக்கப்பட்ட பீ.சீ.சீ. லங்கா கம்பனியில் இருந்து 1985 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய ரூபா 26,715,037 தொகையான கடன் தொகைக்காக 2007 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட வேண்டிய வட்டித் தொகையான ரூபா 86,147,529 தொகை 2008 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திலன் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டின் போது புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் 2008 முதல் 2010 வரையான ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 12 மில்லியன் வட்டித் தொகை அறவிடப்பட முடியாது இது தேங்காய் எண்ணெய் விலையினை நிலை நிறுத்துதல் நிதியத்தின் கணக்குகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக வட்டியல்லாத கடனாக ரூபா 31.55 மில்லியன் தொகை 2002 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளின் போது பீ.சீ.சீ. லங்கா கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இக் கடன் தொகையும் அதிகாரசபையினால் அறவிடப்படாது காணப்பட்டது.

(ஈ) கடன்பட்டோர் மீதியில் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட 10 கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 984,592 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்து கடன்பட்டோராகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முறையான அங்கீகாரம் இன்றி அதிகாரசபை நிதியத்தில் இருந்து ரூபா 23,000,000 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் செயற்பாடுகளின் செயலாற்றல் விளைவு ரூபா 19.04 மில்லியன் மிகையாகக் காணப்பட்டதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 26.4 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளின் ரூபா 45.44 மில்லியன் தொகையான அதிகரிப்பிற்காக ஆராய்ச்சி அபிவிருத்திச் செலவினம் ரூபா 50 மில்லியன் தொகையால் குறைவடைதல் விசேடமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) அதிகாரசபையின் மொத்த நானாவித கடன்பட்டோராகிய ரூபா 22 மில்லியன் தொகையில் ரூபா 12 மில்லியனாகிய 54% ஆனது ஐயக்கடனுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் மிகையானது முழுச் சொத்துக்களில் 2.3% ஆகக் காணப்பட்டது.

(இ) அதிகாரசபையின் மொத்த வருமானங்களில் 73% திறைசேரி மானியங்களையும் 13% வட்டி வருமானங்களையும் 12% செயற்பாட்டு வருமானங்களையும் 2% நானாவித வருமானங்களையும் உள்ளடக்கியிருந்தன.

(ஈ) தேங்காய் எண்ணையின் விலையினை நிலைநிறுத்துதல் நிதியத்திலிருந்து பீசீசி கம்பனிக்கு வழங்கப்பட்ட கடன்தொகைக்குரிய ரூபா 4 மில்லியன் தொகையான வட்டி ஆண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டு ஆண்டின் போது ஐயக் கடனாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 2.2.1 செயலாற்றல்

---------------------

செயன்முறை அபிவிருத்தி தரக்கட்டுப்பாடு, தரப்பாதுகாப்பு, சந்தைப்படுத்தல் அபிவிருத்தியும், ஆராய்ச்சியும், நிதியும் நிர்வாகமும் எனும் ஐந்து பிரிவுகளை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்பாடு உள்ளடக்கியுள்ளது.

அதிகாரசபை மேற்குறித்த பிரிவிற்கு மேலதிகமாக துண்டுத் தேங்காய் உற்பத்தியினை அபிவிருத்தி செய்வதற்காக ஆலை உரிமையாளர்கள் நிதியம் மற்றும் தேங்காய் எண்ணெய் விலையினை நிலை நிறுத்துதல் நிதியம் பேணப்பட்டுவருகின்றன.

மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு பிரிவினதும் பிரதான செயற்பாடுகளின் இலக்குகளும் அவற்றினை அடைந்து கொள்ளலும் சுருக்கி கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**(அ) நிதிச் செயலாற்றல்**

----------------------------

i. மீளாய்வாண்டிற்கான இலக்குகளும் அவற்றினை அடைந்து கொள்ளலும் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது ரூபா 17.3 மில்லியன் தொகையான செயற்திட்டம் முற்றாக கைவிடப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| | நடவடிக்கைகள் /செயற்திட்டங்கள் | மதிப்பீட்டுக் கிரயம்<br>---------------<br>ரூபா மில்லியன் |
|---|---|---|
| **1** | **நிதி நிர்வாகப் பிரிவு** | |
| 1.1 | கழிவுப் பொருட்கள் செல்லும் கால்வாய் திருத்தவேலைகள் | 7 |
| 1.2 | கோட்டை கட்டிடத்திற்கு குளிருட்டல்கள் பொருத்துதலும் மின்சார வழங்கலும் | 5 |
| 1.3 | கோட்டை கட்டிடத்தை பிரிவுபடுத்தல் | 3 |

**2. செயன்முறை அபிவிருத்திப் பிரிவு**

2.1 தெங்குக் கைத்தொழில் அபிவிருத்தி

| | |
|---|---|
| தேங்காய் உட்பாகத்தில் உண்பதற்குரிய வெள்ளை கொப்பறா தயாரிப்பதற்காக மிகவும் பொருத்தமான புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தல் | 0.300 |

2.2 தேங்காய் எண்ணெய் கைத்தொழில் அபிவிருத்தி

| | |
|---|---|
| - தேங்காய் எண்ணெய் கைத்தொழிலுக்காக உத்தரவாத நற்பெயருடன் நுகர்வோர் தேங்காய் எண்ணெய் உற்பத்தியினை சந்தைக்கு அறிமுகப்படுத்தல் | 1 |
| - மிகவும் சுத்தமான தேங்காய் எண்ணெய் (வேர்ஜின் தேங்காய் எண்ணெய்) உற்பத்தியும் மேம்பாடும். | 1 |

i.i- நிதி, நிர்வாகப் பிரிவு, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் செயன்முறை அபிவிருத்தி பிரிவிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா மில்லியன் 17.84 பெறுமதியான 9 செயற்திட்டங்களின் நிதிச் செயலாற்றல் 2% முதல் 38% வரையான ஆகக் குறைந்த வீச்சில் காணப்பட்டது.

| நடவடிக்கைகள் /செயற்திட்டங்கள் | நிதிச் செயலாற்றல் மதிப்பீட்டுச் செலவினம் | உள்ளபடியான செலவினம் | செயலாற்றல் |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| 1. நிதி, நிர்வாகப் பிரிவு | | | |
| 1.1 காணி மற்றும் காணி அபிவருத்தி | 4.5 | 1.094 | 24 |
| 2. சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | | | |
| 2.1 ஏற்றுமதி இயலளவை கட்டியெழுப்புதல் செயற்திட்டங்கள் | 1.44 | 0.468 | 33 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2.2 | தேங்காய் மற்றும் உப உற்பத்திகள் தொடர்பாக நுகர்வோர் கருத்து தொடர்பான மதிப்பீடு | 1.0 | 0.021 | 2 |
| 3. | செயன்முறை அபிவிருத்தி பிரிவு<br>--------------------------------------------- | | | | |
| | 3.1 | தேங்காய்த் துருவல் கைத்தொழிலின் அபிவிருத்தி | | | |
| | 3.1.1 | தேங்காய்த் துருவல் கைத்தொழில் நிறுவகத்தினை தர உத்தரவாதம் மற்றும் தரச் சான்றிதழ் முறைமை ஆய்வுநிலையத்தின் உதவியுடன் செயற்படுத்துதல் | 0.300 | 0.1 | 33 |
| | 3.2 | தெங்கு கைத்தொழில் அபிவிருத்தி<br>------------------------------------------------------- | | | |
| | 3.2.1 | கூடிய தரத்திலான தேங்காய் எண்ணெய் தயாரிப்பிற்காக உயர் தரத்திலான கொப்பறா தயாரிக்கப்படுவதற்கு அவசியமான மரபுரீதியான தொழிநுட்பத்தை மேம்படுத்துதல் | 0.75 | 0.219 | 29 |
| | 3.3 | தேங்காய் எண்ணெய் கைத்தொழில் அபிவிருத்தி<br>------------------------------------------------------------------------------- | | | |
| | 3.3.1 | ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்காக தேங்காய் எண்ணெய்த் துறையை நாளதுவரையாக்கி உத்தரவாத மற்றும் தரச் சான்றிதழ் முறைமை ஆய்வுநிலைய உதவியுடன் செயற்படுத்துதல். | 3.0 | 1.097 | 36 |
| 4. | தென்னந் தும்பு, தும்பு சார்ந்த உற்பத்தி மற்றும் தும்புச் சோறு சார்ந்த கைத்தொழில் அபிவிருத்தி<br>--------------------------------------------------------------------------------------------- | | | | |
| | 4.1 | தும்புகள் பிரித்தெடுத்தல் | 5.0 | 1.904 | 38 |
| | 4.2 | தும்புத் துகள் தொடர்பான பயிற்சி | 0.6 | 0.089 | 15 |
| 5. | கிழக்கு உதயம் | | 1.25 | 0.147 | 12 |
| | | | ---------- | ------- | |
| | | **மொத்தம்** | 17.84 | 5.12 | 28 |
| | | | ====== | ==== | |

(ஆ) **பௌதீகச் செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| நடவடிக்கைகள் /செயற்திட்டங்கள | | இலக்கிடப்பட்ட செயலாற்றல் | உள்ளபடியான செயலாற்றல் | வேறுபாடு | செயலாற்றலின் வேறுபாடு % |
|---|---|---|---|---|---|
| 1. | செயன்முறை அபிவிருத்திப் பிரிவு | | | | |
| 1.1 | கைத்தொழில் மற்றும் திட்டமிடல் பிரிவினைப் பதிவு செய்தல் (அலகு) | 625 | 409 | 216 | 65 |
| 1.2 | கொப்பறா கைத்தொழிலின் அபிவிருத்தி (அலகுகள்) | 10 | 04 | 06 | 40 |
| 1.3 | சிரட்டை உற்பத்திகளின் அபிவிருத்தி (அலகுகள்) | 07 | 01 | 06 | 14 |
| 1.4 | தென்னந்துப்புத்துகள் அபிவிருத்தி (அலகு) | 03 | 01 | 02 | 33 |
| 1.5 | துருவிய தேங்காய்க் கைத்தொழில் அபிவிருத்தியின் கீழ் உலோக உபகரணங்களை அறிமுகப்படுத்தல் (அலகு) | 02 | 01 | 01 | 50 |
| 1.6 | வடக்கு வசந்தம் மற்றும் கிழக்கின் உதயம் (நிகழ்ச்சித்திட்டம்) | 10 | 05 | 05 | 50 |
| 2. | சந்தை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | | | | |
| 2.1 | உற்பத்தி அளவை உறுதிப்படுத்துவதற்கான தேங்காய் உற்பத்திகளை ஆய்வு செய்தல் (பயணங்கள்) | 40 | 0 | 40 | 0 |
| 2.2 | கொப்பறா ஏலவிற்பனை | 48 | 21 | 27 | 44 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2.3 | வெளிநாட்டுச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகளில் கலந்து கொள்ளல் | 02 | 01 | 01 | 50 |
| 2.4 | 2010 ஆம் ஆண்டில் இலங்கை தெங்குக் கைத்தொழில் தொடர்பாக எண் தரவுகள் உள்ளடக்கப்பட்ட வருடாந்த அறிக்கை ஒன்றைத் தயாரித்தல் | 01 | குறிப்பிடப்ப டவில்லை | 01 | 0 |

**2.2.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரசபையின் கடந்த பல வருட மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களை ஒப்பிடுகையில் மொத்த செலவினங்களுக்கு ஒப்பாக மீண்டெழும் செலவினத்தின் அதிகரிப்பும், மூலதனச் செலவினத்தில் குறைவும் ஏற்படும் நிலை அவதானிக்கப்பட்டது.

| **ஆண்டு** | **2007** | **2008** | **2009** | **2010** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| மொத்த மூலதனச் செலவினம் | 116,515,259 | 111,567,888 | 121,555,671 | 72,443,819 |
| மொத்த மீண்டெழும் செலவினம் | 101,003,628 | 115,319,737 | 120,965,589 | 118,527,536 |
| மொத்த செலவினம் | 217,518,887 | 226,887,625 | 242,521,260 | 190,971,355 |
| மூலதனச் செலவினம் மொத்த செலவினத்தின் சதவீதமாக | 54% | 49% | 50% | 38% |
| மீண்டெழும் செலவினம் மொத்த செலவினத்தின் சதவீதமாக | 46% | 51% | 50% | 62% |

**(ஆ) நட்டத்தில் இயங்கும் செயற்திட்டங்கள்**

அதிகாரசபையினால் பேணப்படும் பின்வரும் செயற்திட்டங்கள் கடந்த சில வருடங்களில் நட்டத்தில் இயங்கி வந்தன.

| செயற்திட்டம் | நட்டம் | |
| --- | --- | --- |
| | 2009<br>ரூபா | 2010<br>ரூபா |
| துன்கன்னாவ | 6,094,136 | 2,670,717 |
| வஹரக்கொட | 209,185 | 268,869 |
| தம்பதெனிய | 296,869 | 94,130 |
| நெல்லி | 184,649 | 122,966 |
| மொத்த நட்டம் | 6,784,839 | 3,156,682 |

### 2.2.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

**தேங்காய் எண்ணெய் விலை நிலைநிறுத்தல் நிதியம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இந் நிதியம் தேங்காய் எண்ணெய் விலைத் தளம்பலினால் தொழிலுக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்காக இற்றைக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட நிதியமாகும். தேங்காய் எண்ணெய் விலை வீழ்ச்சியடையும் காலங்களில் இந் நிதியத்தின் மூலம் தேங்காய் எண்ணெய் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டு தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கும் சந்தர்ப்பங்களின் போது சந்தைக்கு வழங்கப்படுவதன் மூலம் கைத்தொழிலாளரையும் நுகர்வோரையும் பாதுகாத்துக்கொள்ளவது இதன் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், இந் நிதியம் ஆரம்பம் முதல் செயற்பாடற்றுக் காணப்பட்டது. இந் நிதியத்தின் ரூபா 256 மில்லியன் தொகையான மொத்தச் சொத்துக்களில் ரூபா 225 மில்லியன் அல்லது 87.8% திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இந் நிதியம் செயற்பாடற்றுக் காணப்பட்ட போதிலும் நிதியம் ஸ்தாபிக்கப்படும் அடிப்படை நோக்கங்களுக்கு முரணாக அந் நிதியம் பயன்படுத்தப்பட்டு 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 11 மில்லியன் பெறுமதியான 2 மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 9,406,117

பெறுமதியான லொறி ஒன்றும் வான் ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 1999/2000 ஆம் ஆண்டுகளின் போது 15 கப் வண்டிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) அதிகாரசபையின் மீளாய்வாண்டிற்கான பாதீடு மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் இந் நிதியத்தின் மூலம் ரூபா 35 மில்லியன் தொகை வடக்கு வசந்தம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேங்காய் எண்ணெய் கைத்தொழில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உரிய அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தமையல் அச் செயற்பாடுகளை அமுலாக்கப்படுவதற்கு முடியாதிருந்தது.

### 2.2.4 அதிகாரசபை வளங்கள் வேறு நிறுவகங்களுக்கு வழங்குதல்

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் பொது முயற்சிகளின் வளங்கள் பயன்படுத்தப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ் விதப்புரைகளுக்கு முரணாக 2 வாகனங்கள் அமைச்சின் பயன்பாட்டிற்காக விடுவிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மேற்குறித்த பொது முயற்சி சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவிற்கு முரணாக அதிகாரசபைக்குச் சேர்க்கப்பட்ட தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 3 பேரும் ஒரு சாரதியும் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கான சம்பளம் உள்ளடங்கலாக சகல படிகள் தொடர்பாக ரூபா 200,038 தொகை அதிகாரசபையினால் ஏற்கப்பட்டிருந்தது.

### 2.2.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்படுதல்

பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் ஒரு வருடத்திற்கு நான்கு தடவைகள்

நடாத்தப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் இரு கூட்டங்கள் மாத்தரமே நடாத்தப்பட்டிருந்தன.

### 2.2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

அதிகரசபையினால் மீளாய்வாண்டு தொடர்பாக தயாரிக்கப்பட்ட பாதீட்டின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட செலவுகளை உள்ளபடியான செலவினங்களுடன் ஒப்பிடப்படுகையில் 10% இலிருந்து 100% வரையிலும் வருமானங்களில் 20% முதல் 40% வரையிலுமான முரண்கள் அவதானிக்கப்பட்டன. எனவே அங்கீகரிக்கப்பட்ட பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன, பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பெறவேண்டிய கணக்குகள்
(இ) நிலையான சொத்துக்கள்
(ஈ) வாகனப் பயன்பாடு
(உ) மனிதவள முகாமைத்துவம்
(ஊ) செயலாற்றல்
(எ) எண்ணெய் விலையினை நிலைநிறுத்தல் நிதியம்